# இலங்கை
# தென்கிழக்குப்
# பல்கலைக்கழகம்

## வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டபடிப்பு மாணவர்களுக்கான கையேடு 2020/2021

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்
மற்றும்
தொழில்சார் கற்கை நிலையம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டபடிப்பு மாணவர்களுக்கான கையேடு

**2020/2021**

## முகாமைத்துவ வர்த்தக பீடம்

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# COMPILATION AND EDITING

Chief Editor:
**Mr. M. Mohamed Shiraj**
Senior Lecturer / Department of Management
Faculty of Management and Commerce
South Eastern University of Sri Lanka

**Co – Editors**
**Prof. Dr. Mrs. F Hansiya Abdul Rauf**
Chair Professor/ Department of Management
Faculty of Management and Commerce
South Eastern University of Sri Lanka

**Dr. S. Safeena MG. Hassan**
Senior Lecturer / Department of Management
Faculty of Management and Commerce
South Eastern University of Sri Lanka

**Prof. Dr. S. Gunapalan**
Professor in Management
Faculty of Management and Commerce
South Eastern University of Sri Lanka

**Mrs. Sareena UMA Gaffoor**
Senior Lecturer / Department of Management
Faculty of Management and Commerce
South Eastern University of Sri Lanka

**Published By:**
Center for External Degree and Professional Learning
South Eastern University of Srilanka
University Park, Oluvil.

**June 2023**

# உபவேந்தரின் செய்தி



வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுபடுத்தக் கூடிய வகையில் இக்கையேடு தயாரிக்கப்பட்டு வெளிவருவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கையேடு வெளிவாரி மாணவர்களின் பதிவு நடவடிக்கைகள் முதல் அவர்கள் பட்டம்பெற்று வெளியேறுவது வரை தெளிவானதும் விளக்கமானதுமான தகவல்களை வழங்குவதிலிருந்து மாணவர்கள் தமது பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான போதிய தெளிவினை இக்கையேட்டின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை மாணவர்கள் தமது விருப்புக்கு ஏற்றவிதத்தில் பாடநெறிகளைத் தெரிந்து கொள்வதற்க்கும் இக்கையேடு உதவும் என்பதில் ஐயமில்லை.

அண்மைக்காலமாக பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் வியாபார நிர்வாகத்துறை பட்டதாரிகள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற மிகப்பெரிய விமர்சனம், பட்டதாரி மாணவர்களது பல்துறைசார் ஆற்றல்கள் குறைந்தமட்டத்தில் உள்ளது என்பதாகும்.

இது விடயத்தில் மாணவர்களாகிய நீங்கள் உங்களது மென் திறன், மொழித் திறன் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் போன்றவற்றினை விருத்திசெய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதன் மூலமே நீங்கள் தொழிற் சந்தையில் உங்களை ஒரு வெற்றிகரமான போட்டியாளராக தயார்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு ஏற்றவிதத்தில் தற்கால வியாபார நிர்வாகத்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களுடனான பாடநெறிகளே இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இக்கையேடு வழங்கும் விளக்கங்களை பாவித்து மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்லலாம் என நம்புகின்றேன். உங்கள் கல்வியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் அபூபக்கர் றமீஸ்**
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

## பீடாதிபதியின் செய்தி



வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற ஒரு சூழ்நிலையில் பாட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டியதும் அது சார்ந்த தகவல்களை மாணவர்களுக்கு உரிய முறையில் கொண்டு சேர்ப்பதும் இன்றியமையாததாகும். அதற்கான முயற்சியினை எமது பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்துடன் இணைந்து வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது பீடத்தினால் வழங்கப்படும் வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானங்களுடன் மாணவர்களின் பல்துறைசார் ஆற்றல்களை வளர்ப்பதற்கான பாட உள்ளடக்கங்களையும் கொண்டமைந்துள்ளது. அதேவேளை தொழில்மய உலகில் எழுகின்ற புதிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல்கள் மாணவர்களிடம் வளர்க்கப்பட வேண்டும் என்றடிப்படையில் மாணவர்மைய கல்வி நிலைக்கு ஏற்றதாக வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய கல்வி ஆண்டில் பதிவினை மேற்கொண்டுள்ள மாணவர்களுக்கு வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அடிப்படையான தகவல்களை இக்கையேடு வழங்குகின்றது. இதன்படி வெளிவாரிப் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான தகைமைகள், பதிவு நடவடிக்கைகள், பரீட்சை நியமங்கள், பட்டத் தராதரங்கள் முதலான தகவல்களை இக்கையேட்டின் மூலம் மாணவர்கள் அறிந்து கொள்ள முடிவதுடன் வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பாட அலகுகள் தொடர்பான குறிப்புக்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

இக்கையேட்டின் மூலம் தேவையான விளக்கங்களைப் பெற்று தங்களது கல்வி நடவடிக்கையினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு எனது வாழ்த்துக்கள்.

**கலாநிதி. சித்தி சபீனா எம் ஜீ ஹசன்**
பீடாதிபதி
முகாமைத்துவ வர்த்தக பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

## பணிப்பாளரின் செய்தி



வெளிவாரி வியாபர நிர்வாக இளமானி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்டம் தொடர்பான மாணவர்களுக்கான பயனுள்ள தகவல்களுடன் இக்கையேடு வெளிவருகின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய முற்றிலும் மறுசீரமைக்கப்பட்டு இயங்கிவருகின்றது. இந்நிலையம் வெளிவாரி மாணவர்களின் நலன் கருதி பல்வேறுபட்ட பட்டநிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் சமூக தெழில்சார் கற்கை நெறிகளையும் நடாத்தி வருகின்றது.

வெளிவாரி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுள் வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இக்கற்கை நெறியினை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்துடன் இணைந்து நடாத்தி வருகின்றது. இக்கற்கைநெறி தொடர்பான முக்கிய பயனுள்ள தகவல்களான வெளிவாரிப் பட்டப்படிப்பினை தொடர்வதற்க்கான தகைமைகள், பதிவுத்தகவல்கள், பரீட்சை நியமங்கள், பட்டத்தின் தராதரங்கள் ஆகியன இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்ப்படும் அனைத்து பாட அலகுகளும் தொழிற் சந்தைக்கு ஏற்ற விதத்தில் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

இக்கையேடு மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை தங்கு தடையின்றி மேற்கொள்வதற்க்கான சிறந்த வழிகாட்டல்களை வழங்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே மாணவர்கள் தமது கற்கை நெறிகளை முறையாக கற்று உரிய காலத்தினுள் பூரணப் படுத்தி தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு வியாபர நிர்வாக இளமானி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்டத்திற்க்கு அனுமதி பெற்று கல்வியை தொடரும் சகல மாணவர்களையும் வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கையேடு வெளிவருவதில் ஒத்துழைப்பு வழங்கிய உபவேந்தர், பீடாதிபதி, கல்வி, கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் உட்பட அனைவருக்கும் எனது நன்றிகள். குறிப்பாக வியாபர நிர்வாக இளமானி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்ட இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எம். முஹம்மட் ஷிராஜ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**பேராசிரியர் கலாநிதி திருமதி எப்(f). எச். அப்துல் றவூப்(f)**
பணிப்பாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்

1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ................................1

2. முகாமைத்துவ வர்த்தக பீடம்.....................................................1

2.1 அறிமுகம் ................................................................... 1

2.2 வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் நிறுவனக் கட்டமைப்பு.... 3

3. வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்..............................................................................4

3.1 அறிமுகம் ................................................................... 4

3.2 முகாமைத்துவ சபை (Management Committee) ............... 5

3.3 கற்கைப் பிரிவுச் சபை / வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்டம் (Board of Study / BBA External (General) Degree)5

3.4 வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு ........................................................................ 7

**4.** வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்.. 8

4.1 அறிமுகம் ................................................................... 8

4.2 அனுமதிக்கான தேவைப்பாடுகள் (Admission Criteria)....... 9

4.3 கற்கை நெறிக்கான காலம் (Duration)...........................10

4.4 கற்கை நெறிக்கான மொழி மூலம் (Medium of Instruction) 10

4.5 கற்கை நெறியின் நெகிழ்ச்சி தன்மை..............................10

4.6 மாணவர்களது கற்கையின் அளவு (Students Course Load) 11

4.7 கற்பித்தல் முறை.........................................................15

5. பரீட்சைப் பிரமாணங்கள் / நடைமுறைகள் (EXAMINATION PROCEDURES) .....................................................................15

5.1 பரீட்சை மதிப்பீட்டு நடைமுறைகள் .................................15

5.1.1 தொடர் மதிப்பீடு ....................................................... 15

5.1.2 பருவகால இறுதிப் பரீட்சை ....................................... 15

5.2 பருவகால இறுதிப் பரீட்சைக்கான தேவைப்பாடுகள் ..........16

5.3 மீள் அமர்வு பரீட்சாத்தி (Repeat Candidates)...................16

5.3.1 ஒரு பரீட்சாத்தி முதலாவது அமர்வை தவறவிட்டால் . 16

5.3.2 பரீட்சை காலப்பகுதியில் சுகயீனம் ஏற்படல் (Sickness during the Examination) ....................................................... 16

5.3.3 ஆகக் கூடுதலான பரீட்சை அமர்வுகளின் எண்ணிக்கை (Maximum Number of Attempts)......................................... 17

5.3.4 மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் ................................... 17

5.3.5 குறைந்த தரங்கள் விருத்தி செய்யப்படும் ................... 19

5.3.6 ஒரு பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கான ஆகக் கூடிய கால அளவு ................................................................ 17

5.4 பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்தல் .........17

5.5 கற்கை நெறிகளுக்கான சராசரி தரக் குறியீடு (Grade Point Average)..........................................................................17

5.6 ஒரு கற்கை நெறி அலகில் சித்தி எய்தல்.....................19

6. AWARD OF DEGREE ...........................................................20

6.1 வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரி மூன்றாண்டு கால பட்டம்பெறுவதற்கான தகைமைகள் (தேவைப்பாடுகள்) ....................................................................20

6.2 சிறப்புச் சித்தி (class) பெறுவற்கான தகைமைகள் ...........20

6.3 வியாபார நிர்வாக சான்றிதழும் வியாபார நிர்வாக டிப்ளோமாவும் ......................................................................22

6.3.1 வியாபார நிர்வாக சான்றிதழ் ...................................... 22

6.3.2 வியாபார நிர்வாக டிப்ளோமா ...................................... 22

6.4 வியாபார நிர்வாக டிப்ளோமாவில் உயர் அல்லது தகமை சித்தியை பெற்றுக்கொள்ளல் ................................................22

6.4.1 உயர் சித்தி (Distinction) ........................................... 22

6.4.2 தகமை சித்தி (Merit)................................................. 23

6.4.3 பல்கலைக்கழக பட்டம் செல்படியாகும் திகதி (Effective date of the Degree) ............................................................ 23

6.5 பல்கலைக்கழக பட்ட விருது (Award of Degree) .............23

7. பரீட்சைக்கான சட்டங்களும் தண்டனைகளும் ...........................24

7.1 பரீட்சைக்கான ஒழுக்கக் கோவைக்கான 1996ம் ஆண்டின் இரண்டாம் இலக்க சட்டத்தின் படி பரீட்சைக்கான ஒழுக்கக்கோவை ..............................................................24

7.2 பரீட்சை குற்றங்களுக்கான விசாரணைகளையும் தண்டனைகளையும் தீர்மானித்தல். .......................................26

7.3 பரீட்சை குற்றங்களுக்கான தண்டனைகள்: ......................26

8. பொதுவான தகவல்கள் (GENERAL INFORMATION) ..........29

8.1 மாணவர் பதிவு (Students Registration) ..........................29

8.2 பதிவு இலக்கம் (Registration Number) ...........................30

8.3 பதிவுப் புத்தகமும் பதிவின் செல்லுபடித் தன்மையும் (Registration Book and Validity of Registration) ....................30

8.4 பதிவினை புதுப்பித்தல் ..................................................30

8.5 பதிவினை இரத்து செய்தல் ...........................................30

8.6 கட்டணங்கள் ...............................................................30

8.7 பல்கலைக்கழக நூலக சேவை ......................................31

8.8 தொடர்பு கொள்ளல் முறைமை ................................31

# 1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் முதலில் பல்கலைக்கழக கல்லூரியாகவே 1995 ஜுன் 26ம் திகதி வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 88/9 இன்படி 1978ன் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24A பகுதியின் கீழ் நிறுவப்பட்டது. இது இலங்கையின் பத்தாவது தேசிய பல்கலைக்கழகமாக 1996 மார்ச் 27ம் திகதி வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 916/7ன் பிரகாரம் தரமுயர்த்தப்பட்டது. பேராசிரியர் எம்.எல்.ஏ காதர் அவர்களே இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தராக நியமிக்கப்பட்டார்கள். 1996 மே 15ம் திகதி முதல் இப்பல்கலைக்கழகமானது தனது முழுமை தழுவிய பணியை ஆரம்பித்தது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் தற்போது 4300 உள்வாரியான மாணவர்களையும் 8000 வெளிவாரியான மாணவர்களையும் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் 6 பீடங்களையும் 19 தீணைக்களங்களையும் 34 அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது. இங்கு கலை மற்றும் கலாசார பீடம், வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடமும் காணபடுகின்றன. பிரயோக விஞ்ஞானத்தை தவிர ஏனைய அனைத்து பீடங்களும் ஒலுவில் வளாகத்தினுள்ளே அமைந்துள்ளன. பிரயோக விஞ்ஞான பீடம் சம்மாந்துறை வளாகத்திலே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தொழில் துறைக்கு ஏற்றவிதமான பட்டதாரிகளை உருவாக்கும் உன்னத நோக்கில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அதனது தூர நோக்கினையும் பணிக்கூற்றினையும் வடிவமைத்துள்ளது.

**தூரநோக்கு (Vision):** விஞ்ஞானங்கள், தொழில்நுட்பங்கள், மானிடவிடயங்களில் உயர் கற்கைகளுக்கும் புத்தாக்கங்களுக்குமான தென்னாசியாவின் ஒரு சர்வதேச புகழ்பெற்ற நிலையமாக விளங்குதல்.

**பணிக்கூற்று (Mission):** பிராந்திய மற்றும் தேசிய தேவைகள், சமூக நல்லிணக்கம், பங்காளர்களின் வலுவாக்கம், திருப்தி என்பனவற்றை நோக்காகக் கொண்டு அறிவினையும் புத்தாக்கங்களையும் உருவாக்கி பரப்புவதனூடாக சர்வதேச தரத்திலான உயர் கற்கைகளுக்கான விரிவான வாய்ப்பினை வழங்குதல்.

# 2. முகாமைத்துவ வர்த்தக பீடம்

## 2.1 அறிமுகம்

முகாமைத்துவ வர்த்தக பீடம் முகாமைத்துவத்துறை, கணக்கியல் மற்றும் நிதியியல் துறை ஆகிய இரண்டு துறைகளை உள்ளடக்கி

வியாபார நிர்வாகம் மற்றும் வர்த்தக துறைகளில் இளமானி பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கில் 1996ல் தனது கல்விசார் முன்னெடுப்புக்களை ஆரம்பித்தது. அப்போது 4 கல்விசார் ஊழியர்களும், 19 வர்த்தக பிரிவு மாணவர்களும், 12 முகாமைத்துவ மாணவர்களுமே காணப்பட்டனர்.

சந்தைப்படுத்தல், கணக்கீடு மற்றும் நிதியியல் துறை பட்டதாரிகளுக்கான கேள்வி உயர்வு குறித்து அறிகையில், பீடமானது விசேட கற்கைநெறி குறித்த அவசியப்பாட்டை உணரத்தொடங்கியது. அதன் விளைவாக 1999ல் முகாமைத்துவ மற்றும் வர்த்தகத்துறை மாணவர்களுக்கு சந்தைப்படுத்தல், கணக்கீடு மற்றும் நிதியியலில் விசேட கற்கைநெறி ஆரம்பமானது.

முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் வரலாற்றில் 2002ம் ஆண்டு ஒரு திருப்புமுனையாக அமைந்திருந்தது. ஏனெனில் அவ்வருடத்திலே விசேட கற்கைத்துறை மீள்வடிவமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவ்விரண்டு துறைகளின் கீழ் 8 கல்விசார் அலகுகள் உருவாக்கப்பட்டன. கணக்கீடு, நிதியியல், தகவல் முறையியல், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், வியாபார நிர்வாகம் மற்றும் வணிகம் என்ற துறைகளில் விசேட கல்வித்திட்டம் வழங்கப்பட்டது.

2008ம் ஆண்டில், இப்பீடமானது இன்னொரு மைல்கல்லை அடைந்தது. முகாமைத்துவ கற்கைகளுக்கான தகவல் தொழிநுட்பத்தில் B.Sc (BSc in ITMS) என்ற பட்டப்படிப்பு சேர்த்துக்கொள்ளப்பட்டமையே காரணமாகும். அதுவே தொடர்ந்து வந்த வருடங்களில் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான B.Sc (BSc in MIT) என மாற்றமடைந்தது. இப்பீடமானது வெளிவாரி மாணவர்களுக்கான வியாபார நிர்வாகத்துறையில் இளமாணிப் பட்டப்படிப்பினையும், வணிகத்துறையில் இளமாணிப் பட்டப்படிப்பினையும் வழங்குகிறது. இவ்விரு வெளிவாரிப்பட்டப்படிப்பினையும் முறையே முகாமைத்துவத்துறை மற்றும் கணக்கியல் மற்றும் நிதியியல் துறையினரே வழங்குகின்றனர்.

வியாபார முகாமைத்துவத்துறையில் மிக உன்னதமான கற்பித்தலையும் ஆய்வொழுங்கினையும் கொண்டதாகவே இப்பீடம் கணிக்கப்படுகிறது. அவ்வாறே படிப்படியாக இந்நாட்டினையும் இந்நாட்டின் கைத்தொழில்களின் கொள்திறனை பலப்படுத்தவும் உறுதுணை செய்யக்கூடிய கல்வித்தகைமைகள் கொண்ட திறன் வாய்ந்த மனித வளங்கள் அத்தியாவசியமாய் திகழ்கின்ற இத்தருணத்தில் வியாபார நிருவாகத்திற்கான முதுமானிப்பட்டப்படிப்பு (MBA) மற்றும் முகாமைத்துவத்துறையில் பட்டப்பின் டிப்ளோமாவினையும் (PGDM) இப்பீடம் வழங்குகிறது. இவ்வாய்ப்பானது கல்வி, திறன் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள தொழில் விற்பன்னர்கள்,


கல்வியியலாளர்கள் மற்றும் உயர் தொழிலதிபர்களுக்காகவே இது விசேடமாக்கப்பட்டுள்ளது.

இப்பீடமாது தனது பட்டதாரிகளை சரியாக இனங்காட்டுவது தொடர்பில் ஏனைய பல்கலைக்கழகங்களுடனும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடனும் நெருங்கிய உறவை மேற்கொண்டு வருகிறது. இப்பீடத்திலிருந்து வெளியாகும் பட்டதாரிகள், சர்வதேச வியாபாரச் சூழலில் ஏற்படும் சவால்களுக்கு தைரியமாக முகம்கொடுக்கும் திறன் வாய்ந்தவர்கள். அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான தொழில்வாய்ப்புக்களை பெறுவதில் வெற்றிகரமானவர்களாக திகழ்கின்றனர் எனலாம்.

2014ம் ஆண்டில் (MIT) முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பம் என்ற துறைக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதை அடுத்து, இப்பீடம் இன்னுமொரு மைல்கல்லை அடைந்தது.

தற்போது சந்தைபடுத்தல் துறைகளோடு சேர்த்து நான்கு துறைகளையும் ஒரு அலகினையும் கொண்டதாக இப்பீடம் காணப்படுகிறது.

## 2.2 வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் நிறுவனக் கட்டமைப்பு



# 3. வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

## 3.1 அறிமுகம்

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் 2004 இல் தாபிக்கப்பட்டதுடன் வெளிவாரி கலை, வியாபார நிர்வாக மற்றும் வர்த்தக இளமாணிப் பட்டப்டிடிப்புக்களுடன் பல தொழிர்சார் கற்கைகளையும் அறிமுகப்படுத்தியது. தற்போது மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் பல்வேறு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளிகளையும் இந் நிலையம் வழங்கிவருகின்றது.

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 15.10.2010ஆம் திகதியிடப்பட்ட 932ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமையவும் 01.02.2010ஆம் திகதிய வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் வெளிவாரிக் கற்கைகள் தொடர்பான கையேட்டின் அடிப்படையிலும் மறுசீரமைக்கப்பட்டு, வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

தற்போது சுமார் 12000 இற்க்கு மேற்பட்ட வெளிவாரி மாணவர்கள் இந் நிலையத்தில் பதிவினை மேற்கொண்டு பின்வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடர்ந்து வருகின்றனர்.

i. கலைமாணி (பொது) - BA ( General )
ii. வியாபார நிருவாகமாணி (பொது) - BBA (General)
iii. வணிகமாணி (பொது) - BCOM (General)

மேற்கூறப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக இந் நிலையம் கீழ்வரும் தொழில்சார் கற்கைகளையும் வழங்கிவருகின்றது.

- Professional Diploma in Counseling
- Diploma in English
- Diploma in Journalism
- Certificate in English
- Certificate in Computer Application
- Short Course in Web Designing and Development
- Short Course in Internet and E-mail Application

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் முகாமைத்துவ சபையினால் நிருவகிக்கப்படுகிறது. சகல பட்டநிகழ்ச்சிகளும் கற்க்கைப் பிரிவு சபை (Board of Study ) பீட சபை (Faculty

Board), பேரவைகளினால் (Senate) வடிவமைக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

### Vision of CEDPL – CEDPL இன் தூர நோக்கு

"இப்பிராந்தியம், நாடு மற்றும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்றல் மற்றும் மூலோபாய பங்காளியாக மாறுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதில் சிறந்து விளங்கும் மையமாக இருத்தல்"

### Mission of CEDPL - CEDPL இன் இலட்சிய நோக்கு

"மேம்படுத்தப்பட்ட நிதி மேலாண்மை மற்றும் நிலைத்தன்மையுடன் திறன் வாய்ந்த மற்றும் நல்ல நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலம் உகந்த போட்டித்தன்மையுள்ள பங்குதாரர் திருப்திக்கு தரமான பட்டங்கள் மற்றும் தொழில்முறை படிப்புகளுக்கு சமமான அணுகலை வழங்குதல்"

## 3.2 முகாமைத்துவ சபை (Management Committee)

முகாமைத்துவ சபை வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையத்தின் கல்வி மற்றும் நிறைவேற்று சபையாக காணப்படுகிறது. இச்சபையானது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒருவர், பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டு பேரவை சபையில் அங்கத்துவம் வகிக்கும் இரு உறுப்பினர்கள், பீடாதிபதிகள் (வெளிவாரி மற்றும் தொழில்சார் கற்கைகளை வழங்கும் பீடங்கள்), கற்கைப் பிரிவுச் சபையின் தலைவர்கள், பதிவாளர், நிதியாளர், வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் என்போரை உள்ளடக்கியுள்ளது.

முகாமைத்துவ சபை தனது பணிகளை பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2010 ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி வெளியிடப்பட்ட வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் விரிவாக்கக் கற்கைகள் தொடர்பான கைநூலின் பிரிவு 3.1 அடிப்படையில் மேற்கொள்ளும்.


## 3.3 கற்கைப் பிரிவுச் சபை (Board of Study)

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டத்தின் கற்கைப் பிரிவுச் சபை பின்வரும் அங்கத்துவர்களைக் கொண்டிருக்கும்.

1. கற்கைச் சபையின் தலைவர் (முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீட சபையினால நியமிக்கப்படும் சிரேஷ்ட் உறுப்பினரகளில் ஒருவர்)
2. இக்கற்கை சபையின் செயலாளர் (வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர்)
3. பிரதிப் பணிப்பாளர் - பதிவு மற்றும் பரீட்சை
4. பிரதிப் பணிப்பாளர் - கற்கை வளங்கள்
5. பிரதிப் பணிப்பாளர் - பயிற்சி
6. முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீட அவையினால் நியமிக்கப்படும் உள்வாரியான மூன்று சிரேஷ்ட விரிவுரையாளார்கள்.
7. முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீட அவையினால் நியமிக்கப்படும் இரண்டு வெளிவாரி உறுப்பினர்கள்
8. வியாபார நிர்வாக இளமாணி (பொது) கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர்

இக்கற்கைப் பிரிவுச் சபை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2010 ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி வெளியிடப்பட்ட ‘வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் விரிவாக்கக் கற்கைகள் தொடர்பான கைநூலின்’ பிரிவு 3.1 அடிப்படையில் பணிகளை ˙கொள்ளும்.

## 3.4 வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையத்தின் நிருவாகக் கட்டமைப்பு



# 4. வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

## 4.1 அறிமுகம்

மீள்கட்டமைக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப்பட்ட கற்கைநெறியானது கணக்கியல், நிதி, பொருளாதாரம், முகாமைத்துவம், மற்றும் வணிக சூழல் ஆகிய பாடநெறிகளை ஒருங்கிணைத்ததாக காணப்படுகிறது. இப்பாடத்திட்டமானது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவத் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. இது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையதத்தின் ஊடாக ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப்பட்ட கற்கைநெறியினை அறிமுகப்படுத்துவதற்கான பிரதான நோக்கம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்ற, கல்விசார் ஏனைய தகைமைகளையும் உடைய இலங்கை பல்கலைக்கழக முறைமையின் கீழ் உள்வாரிப் பட்டப்படிப்பினை தொடர வாய்ப்பிழந்த மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதாகும். மிக நீண்ட காலமாக தென்கிழக்கிலங்கை அச்சுறுத்தலுக் குட்பட்டதாகவே காணப்பட்டது. வெகுசிலரே பல்கலைக்கழகம் நுழையும் வாய்ப்பினை பெற்றிருந்தனர். கடந்த 27 வருடங்களாக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் முகாமைத்துவ திணைக்களம் உள்வாரியான மாணவர்களுக்கு சில விசேட கற்கைகளுடன் கூடிய தரமான கல்வியை வழங்கி வருகின்றது.

**கற்கைநெறியின் தூரநோக்கானது (Vision)**

உலகத் தரத்திலான வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப்பட்டத்தினை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் தேசிய பொருத்தப்பாட்டுடனும், பிராந்திய ஏற்றுக்கொள்ளலுடனும் சர்வதேச ரீதியில் பொருந்தும் வகையிலும் வழங்குவதாகும்

**கற்கைநெறியின் பணிக்கூற்றானது (Mission)**

மாணவாகளால் தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவ விசேட துறையில் சிறந்த அடிப்படையினை வழங்குவதோடு, அவர்கள் விரும்புகின்ற துறையில் முதல்மட்ட பதவிநிலைகளுக்கப் பொருந்தும் விதத்தில் தயார்செய்தல் மற்றும் வாழ்நாளுக்கான கற்றல் விருப்பத்தை அடையும் வகையில் மாணவர்களை ஊக்குவித்தலுமாகும்.

**கற்கைநெறியின் நோக்கங்களாவன:**

1) நாட்டின் பிரதேச மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கான வியாபார முகாமையாளர்களையும் முயற்சியாண்மை யாளர்களையும் உருவாக்குதல்.
2) நிறுவனங்களை முகாமை செய்வதற்கு பொருத்தமான தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல்.
3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடாத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற முகாமைத்துவ நடவடிக்கைகளில் முகாமையாளரின் வினைத்திறனான தீர்மானங்களை மேற்கொள்ளல்.
4) தொழில் சந்தைகளுக்குப் பொருத்தமானவர்களைத் தயார்படுத்தல்.

## 4.2 அனுமதிக்கான தேவைப்பாடுகள் (Admission Criteria)

விண்ணப்பதாரி வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப்பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்க்கான குறைந்த பட்ச தகுதியாக பின்வரும் தகைமைகளுள் ஏதாவது ஒன்றில் ஆகக் குறைந்த தகைமையினையாவது கொண்டிருத்தல் வேண்டும்:

i. கல்வி பொது தராதர உயர் தரப் (க.பொ.த. உ.த) பரீடசையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது மூன்று (3) பாடங்களில் 'S' தரத்திலான சித்தியினை பெற்றிருப்பதுடன் பொது அறிவு சாதாரண பரீட்சையில் குறைந்தது 30 புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் / சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ii. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (HNDM) தரம் (II).

**அல்லது**

iii. இலங்கை தொழில் நுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (NCBS) (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

iv. இலங்கை தொழில் நுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்க்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ் (Book - Keepers Higher Certificate in Commerce)

**அல்லது**

v. கல்வி பொது தராதர சாதாரண தரத்துடன் AAT நிலை (III) அல்லது CIMA நிலை – II, அல்லது Chartered (CASL) நிலை – II.

**அல்லது**

vi. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிட்ட வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் விரிவாக்கல் கற்கை நெறி கையேட்டின் பகுதி 3.1ற்கு (01.10. 2010) இணங்க தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் செனட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தகமை.

## 4.3 கற்கை நெறிக்கான காலம் (Duration)

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பானது மூன்று கல்வியாண்டைக் கொண்ட கற்கை நெறியாகும். ஒரு கல்வியாண்டு இரு பருவகாலங்களை (semester) கொண்டதாக காணப்படும். மாணவர்கள் பட்டப்படிப்பினை பதிவினை மேற்கொண்டதிலிருந்து ஆறு கல்வியாண்டினுள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

## 4.4 கற்கை நெறிக்கான மொழி மூலம் (Medium of Instruction)

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமாக விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்படும். மாணவர்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப ஏதாவது ஒரு மொழியினை மாத்திரம் தெரிவுசெய்து கொள்ள முடியும். மேலும் மாணவர்கள் தங்களது கற்கை காலப்பகுதியினுள் ஒரு மொழியில் மாத்திரமே கற்கையினை தொடரமுடியும்.

## 4.5 கற்கை நெறியின் நெகிழ்ச்சி தன்மை

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு தன்னை பதிவு செய்து கொள்ளும் மாணவர்கள் பல்வேறுபட்ட மட்டங்களில் (levels) வெளியேற முடியும். இப்பாடத்திட்டமானது மாணவர்களின் சௌகரியத்திற்க்கும் தேவைப்பாடுகளுக்கும் ஏற்ப நெகிழ்ச்சியானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏதேனும்

காரணங்களுக்காக மாணவர்கள் எவரும் பட்டநிகழ்ச்சித் திட்டத்தினை தொடரவிரும்பாது இருப்பின் அல்லது இடைநிறுத்திக் கொள்ளவிரும்பும்போது, அத்தகையோர் குறித்த கல்வியாண்டுக்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யுமிடத்து பின்வரும் சான்றிதழ்களைப் பெறமுடியும்:

i. வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் (Certificate in Business Administration) - முதலாவது வருட கற்கையினை வெற்றிகரமாக பூரணப்படுத்தம் போது **(30 பாடநெறி தரப்புள்ளிகள் - (Credits) பெற்றிருக்க வேண்டும்)**.

ii. வியாபார நிர்வாகத்தில டிப்ளோமா (Diploma in Business Administration) – முதலாம் மற்றும் இரண்டாம் வருட கற்கையினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் **(60 பாடநெறி தரப்புள்ளிகள் (Credits) பெற்றிருக்க வேண்டும்)**.

iii. வியாபார நிர்வாகத்தில் பொது இளமானிப் பட்டம் (General Degree in Business Administration) – முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட கற்கையினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் **(90 பாடநெறி தரப்புள்ளிகள் (Credits) பெற்றிருக்க வேண்டும்)**.

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டத்தினை பெற விரும்பும் மாணவர்கள் மொத்தம் 36 பாட அலகுகளை (course units) பூர்த்தி செய்ய வேண்டும். இப்பாட அலகுகள் அடிப்படை பாடநெறி (Foundation courses), பிரதான பாடநெறி (Core courses), மற்றும் தெரிவுப் பாடநெறி (Supplementary / Elective courses) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சகல அடிப்படை கற்கை நெறிகளும் முதலாம் கல்வியாண்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களில் ஒவ்வொரு பருவகாலத்திலும் ஒரு தெரிவுப் பாடநெறியினை தெரிவு செய்ய முடியும்.

## 4.6 மாணவர்களது கற்கையின் அளவு (Students Course Load)

மாணவர்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் ஆறு பாட அலகுகளை கற்க வேண்டும். ஓவ்வொரு பாட அலகுகளின் தன்மை அதன் பாடப்பரப்பு என்பனவற்றின் அடிப்படையில் அதன் கற்கை மணித்தியாலங்கள் தீர்மானிக்கப்படும். ஒரு பருவத்திற்கான பாட அலகுகளின் தரப்புள்ளிகளின் கூட்டுத்தொகை 15 ஆகும். ஒரு கல்வியாண்டின் மொத்த தரப்புள்ளிகளின் (Credits) கூட்டுத்தொகை 30 ஆவதுடன் முழு பட்டப்படிப்பிற்கான மொத்த தரப்புள்ளிகள் 90 ஆகும்.

**பாட அலகுகளின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| பாடக் குறியீடு (Course Code) | பாடத் தலைப்பு (Course Title) | தரப்புள்ளி (Credit Points) |
|---|---|---|
| | **வருடம் I – பருவம் I** | |
| **BBA 11012 (F)** | பொது ஆங்கிலம் I | 2 |
| **BBA 11023 (F)** | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 3 |
| **BBA 11033 (C)** | முகாமைத்துவக் கொள்கைகள் | 3 |
| **BBA 11043 (C)** | நுண்பாகப் பொருளியல் | 3 |
| **BBA 11052 (F)** | வியாபாரக் கணிதவியல் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |
| **BBA 11062 (E)** | மென்திறனும் தொழில் விருத்தியும் | 2 |
| **BBA 11072 (E)** | வாழ்க்கைக்கான உளவியல் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் I – பருவம் II** | |
| **BBA 12083 C)** | நிதி கணக்கியல் | 3 |
| **BBA 12093 (F)** | வியாபாரப் புள்ளிவிபரவியல் | 3 |
| **BBA 12102 (F)** | பொது ஆங்கிலம் II | 2 |
| **BBA 12113 (C)** | பெரும்பாகப் பொருளியல் | 3 |
| **BBA 12122 (C)** | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |

| | | |
|---|---|---|
| **BBA 12132 (E)** | வியாபார சூழல் | 2 |
| **BBA 12142 (E)** | இன ஒற்றுமையும் சமூக நல்லிணக்கமும் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| **பெற்றுக்கொள்ள வேண்டிய மொத்த தரப்புள்ளிகள்** | | **30** |
| **வருடம் II – பருவம் I** | | |
| **BBA 21153 (C)** | மொத்தத் தர முகாமைத்துவம் | 3 |
| **BBA 21163 (C)** | மனித வள முகாமைத்துவம் | 3 |
| **BBA 21172 (C)** | முகாமைத்துவ தகவல் முறைமை | 2 |
| **BBA 21183 (C)** | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 3 |
| **BBA 21192 (C)** | நிதி முகாமைத்துவம் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |
| **BBA 21202 (E)** | நிதி அறிக்கையிடல் | 2 |
| **BAA 21212 (E)** | வங்கியியலும் நிதியும் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| **வருடம் II – பருவம் II** | | |
| **BBA 22223 (C)** | செயற்பாட்டு முகாமைத்துவம் | 3 |
| **BBA 22233 (C)** | கிரயக் கணக்கியல் | 3 |
| **BBA 22242 (C)** | முயற்சியாண்மை அபிவிருத்தி | 2 |
| **BBA 22253 (C)** | முகாமைத்துவத்திற்கான கணிய நுட்பங்கள் | 3 |
| **BBA 22262 (C)** | வியாபாரச் சட்டம் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |
| **BBA 22272 (E)** | பொது உறவு மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் | 2 |
| **BBA 22282 (E)** | கணனிமையக் கணக்கியல் முறைமை | 2 |
| | **மொத்தம்** | **15** |

| | | |
|---|---|---|
| **பெற்றுக்கொள்ள வேண்டிய மொத்த தரப்புள்ளிகள்** | | **30** |
| **வருடம் III – பருவம் I** | | |
| **BBA 31293 (C)** | தந்திரோபாய முகாமைத்துவம் | 3 |
| **BBA 31302 (C)** | முகாமைப் பொருளியல் | 2 |
| **BBA 31313 (C)** | முதலீட்டு மற்றும் கூட்டு முகாமைத்துவம் | 3 |
| **BBA 31323 (C)** | முகாமைத்துவ கணக்கியல் | 3 |
| **BBA 31332 (C)** | நிறுவன மாற்றமும் அபிவிருத்தியும் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |
| **BBA 31342 (E)** | சர்வதேச வர்த்தகம் | 2 |
| **BBA 31352 (E)** | தொழில் உளவியல் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| **வருடம் III – பருவம் II** | | |
| **BBA 32363 (C)** | செயற்திட்ட முகாமைத்துவம் | 3 |
| **BBA 32373 (C)** | நிறுவன நடத்தை | 3 |
| **BBA 32382 (C)** | கணக்காய்வு | 2 |
| **BBA 32393 (C)** | வரியியல் | 3 |
| **BBA 32402 (C)** | சேவை சந்தைப்படுத்தல் | 2 |
| **தெரிவுப்பாடங்கள் (Supplementary / Elective courses)** | | |
| **BBA 32412 (E)** | முகாமைத்துவ தொடர்பாடலும் தலைமைத்துவமும் | 2 |
| **BBA 32422 (E)** | ஆளணி பாதுகாப்பும் சமூகப் பொறுப்பும் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| **பெற்றுக்கொள்ள வேண்டிய மொத்த தரப்புள்ளிகள்** | | **30** |

### 4.7 கற்பித்தல் முறை

பொருத்தமான பாட கை நூல்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பருவ காலத்திலும் அனைத்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் பாடநெறியானது சுய கற்கை முறையுடையதாக காணப்படும். இருப்பினும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆக குறைந்தது இரண்டு நேரடி சந்திப்பு மூலமான விரிவுரைகளை வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்யும்.

அனைத்து பாட கை நூல்களும் Moodle கற்றல் முகாமை முறைமை (LMS) ஊடாக பதிவேற்றம் செய்யப்படும். மாணவர்கள் கற்றல் முகாமை முறைமையிலும் வெளிவாரி கற்கை நெறிகளின் இணையத் தளத்திலும் பதிவேற்றப்படும் விடையங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக அவதானத்தில் இருக்க வேண்டும்.

# 5. பரீட்சைப் பிரமாணங்கள் / நடைமுறைகள் (EXAMINATION PROCEDURES)

## 5.1 பரீட்சை மதிப்பீட்டு நடைமுறைகள்

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை தொடரும் ஒவ்வொரு மாணவர்களும் தொடர் மதிப்பீடு மூலமும், பருவகால இறுதிப் பரீட்சை மூலமும் மதிப்பிடப்படுவார்கள். இவ்விரண்டு முறைகளும் பின்வரும் பகிர்ந்தளிக்கப்பட்ட புள்ளிகளின் கூட்டாக காணப்படும்.

தொடர் மதிப்பீடு (Continuous assessment) - 30%

பருவகால இறுதிப் பரீட்சை (End semester examination) - 70%

### 5.1.1 தொடர் மதிப்பீடு

தொடர் மதிப்பீட்டின் முறைகள் பாட அலகுகளுக் கேற்ப வேறுபடும். இருந்தாலும், பொதுவான முறைகளாக தனிநபர் ஒப்படை, குழு ரீதியான ஒப்படை, வினாவிடை, சிறு ஆராய்ச்சி அறிக்கைகள், இடைப் பருவகாலப் பரீட்சை போன்றவற்றைக் குறிப்பிடலாம் ஒரு பாட அலகிற்கு குறைந்தது இரண்டு ஒப்படைகள் சமர்ப்பிக்கப் படவேண்டும். இந்த மதிப்பீடுகளில் குறைந்தது ஒரு மதிப்பீடேனும் (assignment) நேருக்கு நேரான பாட அமர்வில் பரீட்சை வடிவில் நடாத்தப்படும்.

### 5.1.2 பருவகால இறுதிப் பரீட்சை

ஒவ்வொரு பாட அலகுக்குமான பருவகால இறுதிப் பரீட்சை அப்பாட அலகு உள்ளடக்கப்பட்டுள்ள பருவகால இறுதியில்

இடம்பெறும். ஒவ்வொரு பாட அலகிற்கும் பருவகால இறுதிப் பரீட்சை இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் தரப்புள்ளிக்கு அமைவாக இடம்பெறும்.

### 5.2 பருவகால இறுதிப் பரீட்சைக்கு சமூகமளிக்க தவறுதல்

அனுமதியின்றி அல்லது ஏற்றுக்கொள்ளகூடிய காரணமின்றி யாராவது ஒரு மாணவர் பரீட்சைக்கு சமூகமளிக்க தவறும் பட்சத்தில் அம்மாணவருக்கு 'AB' (Absent) என்ற தரக்குறியீடு வழங்கப்படும். இத்தரக்குறியீடானது சித்தியடையவில்லை (Fail) என்பதற்கு சமனாகும்.

## 5.3 மீள் அமர்வு பரீட்சாத்திகள் (Repeat Candidates)

### 5.3.1 ஒரு பரீட்சாத்தி முதலாவது அமர்வை தவறவிட்டால்

எந்தவொரு பரீட்சையும் மற்றுமொரு தடவை நடத்தப்படமாட்டாது. ஆகவே ஒரு மாணவர் தவறவிட்ட பாட அலகினை அடுத்து வரும் சந்தர்பத்திலேயே மீள் அமர்வாக மேற்கொள்ள முடியும்.

மீள் அமர்வு பரீட்சாத்தி ஒருவர் மீள் அமர்வில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் நேரடியாக 100 வீதத்துக்கு கணிக்கப்பட்டு ஆகக்கூடியது "C" பெறுபேறே வழங்கப்படும்.

### 5.3.2 பரீட்சை காலப்பகுதியில் சுகயீனம் ஏற்படல் (Sickness during the Examination)

பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் ஒரு மாணவர் சுகயீனம் காரணமான பரீட்சைக்கு தோற்ற முடியாத சந்தர்ப்பத்தில், அம்மாணவன்/மாணவி அல்லது அம்மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இது விடயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மருத்துவ ஆவணங்களுடன் குறிப்பிட்ட பரீட்சை முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தின் பதிவாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் மூதவை சபையே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும். அவ்வாறு மூதவை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கை அங்கீகரிக்குமிடத்து அடுத்து வரும் ஆண்டில் அதே பருவத்தில் நிகழும் பரீட்சைக்கு அம் மாணவர் புதிய பரீட்சாத்தியாக (Fresh Candidate) தோற்ற முடியும்.

#### 5.3.2.1 மருத்துவ அத்தாட்சிப் பத்திரம்

இது அரசாங்க வைத்தியசாலை மருத்துவ அதிகாரியினால் வழங்கப்பட்ட மருத்துவ சான்றிதழாக இருக்க வேண்டும். இது கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் இலங்கை வைத்திய சபையினாலோ தனியார் வைத்தியசாலையினாலோ வழங்கப்படும் சான்றிதழ்கள் பல்கலைக்கழக வைத்திய அதிகாரியினால் அங்கீகரிக்கப்படுமிடத்து அது ஏற்றுக்கொள்ளப்படும்.

### 5.3.3 ஆகக் கூடுதலான பரீட்சை அமர்வுகளின் எண்ணிக்கை (Maximum Number of Attempts)

ஒரு பரீட்சாத்தி ஒரு பரீட்சையினை ஆகக்கூடுதலாக 3 முறை மாத்திரமே முயற்சி செய்ய முடியும். இருந்த போதிலும் இம் மீள் பரீட்சை எழுதும் காலப்பகுதியினுள் அம்மாணவரின் பதிவு செல்லுபடியானதாகக் காணப்பட வேண்டும்.

### 5.3.4 ஒரு பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கான ஆகக் கூடிய கால அளவு

மாணவன் ஒருவன் வியாபார நிர்வாக இளமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு புதிவு செய்ததிலிருந்து 6 கல்வியாண்டிற்குள் கற்கை நெறியை பூர்த்தி செய்ய வேண்டும்.

## 5.4 பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்தல்

மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்ய அனுமதி வழங்கப்படுவர். இதற்க்காக வெளிவாரி பட்டப்படிப்பு கற்கைகள் நிலைய அலுவலகத்தில் காணப்படும் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி சமப்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்காக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் விதிக்கப்படும் கட்டணம் அறவிடப்படும்.

## 5.5 கற்கை நெறிகளுக்கான சராசரி தரக் குறியீடு (Grade Point Average)

ஒவ்வொரு பாட அலகுகளுக்கும் மாணவர்கள் பெறும் புள்ளிகளை அடிப்படையாக் கொண்டு 12 தரக் குறியீடுகள் வழங்கப்படும். இக்குறியீடுகள் A+ (Excellent) இருந்து F (Fail)

வரை காணப்படும். ஒவ்வொரு தரத்துக்குமான (Grade) புள்ளி வீச்சுக்களும் அவற்றுக்கான தரப்புள்ளிகளும் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 3

| புள்ளிகளின் வீச்சு | தரம் | தரப்புள்ளி பெறுமானம் |
|---|---|---|
| 75-100 | A+ | 4.00 |
| 70-74 | A | 4.00 |
| 65-69 | A- | 3.7 |
| 60-64 | B+ | 3.3 |
| 55-59 | B | 3.0 |
| 50-54 | B- | 2.7 |
| 45-49 | C+ | 2.3 |
| 40-44 | C | 2.0 |
| 35-39 | C- | 1.7 |
| 30-34 | D+ | 1.3 |
| 25-29 | D | 1.0 |
| 00-24 | F | 0.0 |

**தரப்புள்ளிச் சராசரி (GPA) கணிப்பீடு செய்வதற்கான மாதிரி:**

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பின் முதலாம் வருட முதல் பருவகால பரீட்சையொன்றில் மாணவர் ஒருவர் பெற்ற பெறுபேறுகளின் தரப்புள்ளிச் சராசரி பின்வரும் சூத்திரத்தினைக் கொண்டு கணிப்பிடப்படும்:

$$\text{GPA} = \frac{\sum_{i=1}^{N} (\text{Credit Hours}) \times (\text{Grade Point } i)}{\sum_{i=1}^{N} (\text{Credit Hours})}$$

Where i = Course number and N= the total number of courses considered

## அட்டவணை 4 GPA கணிப்பீட்டின் விளக்க மாதிரி

| பாடக் குறியீடு | பெற்றுக் கொண் ட தரம் | பாடதின் தரப்புள்ளி | தரப்பு ள்ளி பெறு மான ம் | பெற்றுக் கொண்ட தரப் புள்ளியின் பெறுமானம் ஞ் பாடதின் தரப்புள்ளி தரப்புள்ளி பெறுமானம் |
|---|---|---|---|---|
| BBA 11012(F) | A+ | 2 | 4.00 | 08.00 |
| BBA 11023(F) | A- | 3 | 3.70 | 07.40 |
| BBA 11033(C) | B+ | 3 | 3.30 | 06.60 |
| BBA 11043(C) | C+ | 3 | 2.30 | 04.60 |
| BBA 11052 C) | C | 2 | 2.00 | 06.00 |
| BBA 11062(E) | A | 2 | 4.00 | 16.00 |
| **Total** | | **15** | | **48.60** |

$$GPA = \frac{\text{Total number of Grade Point Values Earned}}{\text{Total number of credits}}$$

$$= \frac{48.60}{15}$$

$$= 3.24$$

ஆகக்கூடிய சராசரி தராதரப்புள்ளி (GPA) 4.00 ஆகவும் அதேவேளை ஆகக்குறைந்தது (GPA) 0 ஆகவும் காணப்படும்

## 5.6 ஒரு கற்கை நெறி அலகில் சித்தி எய்தல்

ஆகக் குறைந்தது C தரத்தினையோ அதனைவிட அதிகமாகவோ பெறுமிடத்து குறிப்பிட்ட பாட அலகில் அம்மாணவர் சித்தி எய்தியதாக கருதப்படும்.

### 5.6.1. குறைந்த தரங்களை விருத்தி செய்தல்

தரம் “C” ஐ விட குறைந்த தரங்களைப் பெறுபேறாக பெற்றுக்கொண்ட மாணவர்களும் அடுத்த வருடத்தின் கற்கையை தொடரலாம். எனினும் அதே பாட அலகினை மீளமர்வின் மூலம் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும்.

## 5.7 பரீட்சை முடிவுகளை வெளியிடுதல்

பரிட்சை முடிவுகள் பீடத்தின் பரீட்சை குழுவினால் (Board of Examination) வெளியிடப்படும்.

# 6. AWARD OF DEGREE

## 6.1 வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரி பட்டம் பெறுவதற்கான தகைமைகள் (தேவைப்பாடுகள்)

கீழ்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் மாணவர்கள் வியாபார நிர்வாக இளமாணி (பொது) பட்டம் பெற தகுதியானவர்களாக கருதப்படுவர்.

1. ஆகக் குறைந்தது 90 தரப்புள்ளிகள் (Credit Points) பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

   **அத்துடன்**

2. ஒவ்வொரு பருவத்திலும் ஆகக் குறைந்தது 2.00 தரப்புள்ளிச் சராசரி (GPA) பெற்றிருத்தல் வேண்டும்

   **அத்துடன்**

3. மூன்று ஆண்டுகளுக்குமான (Overall GPA) ஆகக் குறைந்த 2.00 தரப்புள்ளிச் சராசா (GPA) பெற்றிருத்தல் வேண்டும்

   **அத்துடன்**

4. எந்தவொரு F தரத்தினையும் பெற்றிருக்கக் கூடாது.

   **அத்துடன்**

5. பருவமொன்றில் குறைவான சித்தி தரங்கள் (C-, D+ or D) எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

   **அத்தோடு**

6. மேற்சொன்ன தேவைப்பாடுகள் யாவற்றையும் பல்கலைக்கழகத்தில் பதிவினை மேற்கொண்ட தினத்திலிருந்து 06 கல்வியாண்டுகளுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும்

## 6.2 சிறப்புச் சித்தி (class) பெறுவற்கான தகைமைகள்

**i. முதலாம் வகுப்பு (First Class):** பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்தி ஒருவருக்கு முதலாம் வகுப்பு (First Class) சித்தி வழங்கப்படலாம்.

1. பட்டத்துக்கான மொத்த GPA ஆக ஆகக் குறைந்தது 3.70 இனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

2. மொத்தப் பாட அலகுகளில் அரைவாசிக்கு மேல் A+ அல்லது A தரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

3. C இற்குக் குறைவான தரங்களைப் பெற்றிருத்தல் கூடாது.

   **அத்தோடு**

4. மேற்படி தேவைப்பாடுகள் யாவற்றையும் தொடர்ச்சியான மூன்று கல்வியாண்டுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும்.

**ii. இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) (Second Class (Upper Division)):** பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் அபேட்சகர் ஒருவருக்கு இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) (Second Class (Upper Division)) சித்தி வழங்கப்படலாம்.

1. பட்டத்துக்கான மொத்த GPA ஆக ஆகக் குறைந்தது 3.30 இனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

2. மொத்தப் பாட அலகுகளில் அரைவாசிக்கு மேல் B தரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

3. C இற்குக் குறைவான தரங்களைப் பெற்றிருத்தல் கூடாது.

   **அத்தோடு**

4. மேற்படி தேவைப்பாடுகள் யாவற்றையும் தொடர்ச்சியான மூன்று கல்வியாண்டுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும்.

**iii. இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) (Second Class (Lower Division)):** பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் அபேட்சகர் ஒருவருக்கு இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) (Second Class (Lower Division)) சித்தி வழங்கப்படலாம்.

1. பட்டத்துக்கான மொத்த GPA ஆக ஆகக் குறைந்தது 3.00 இனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

2. மொத்தப் பாட அலகுகளில் அரைவாசிக்கு மேல் B தரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்தோடு**

3. C இற்குக் குறைவான தரங்களைப் பெற்றிருத்தல் கூடாது.

   **அத்தோடு**

4. மேற்படி தேவைப்பாடுகள் யாவற்றையும் தொடர்ச்சியான மூன்று கல்வியாண்டுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும்.

அட்டவணை 5 இல் காட்டப்பட்டவாறு தரப்புள்ளிச் சாராசரி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**அட்டவணை – 5 : சிறப்புச் சித்திகளுக்கான தரப்புள்ளிச் சராசரி**

| GPA | Award |
|---|---|
| 3.70 & above | First class |
| 3.30 – 3.69 | Second class (Upper) |
| 3.00 – 3.29 | Second class (Lower) |

## 6.3 வியாபார நிர்வாக சான்றிதழும் வியாபார நிர்வாக டிப்ளோமாவும்

மூன்றாண்டு கால பட்டப்படிப்பினை பூர்த்தி செய்ய முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில் அம்மாணவனின் / மாணவியின் கோரிக்கையின் பெயரில் சான்றிதழோ டிப்ளோமா சான்றிதழோ வழங்கப்படும்.

### 6.3.1 வியாபார நிர்வாக சான்றிதழ் (Certificate in Business Administration)

மாணவரொருவர் 2.00 ற்கு குறைவாகாத GPA யுடன் முதலாம் வருடத்திற்கான 30 Credit களை பெறும் போது வியாபார நிர்வாக சான்றிதழ் வழங்கப்படும்.

### 6.3.2 வியாபார நிர்வாக டிப்ளோமா (Diploma in Business Administration)

மாணவரொருவர் 2.00 இற்கு குறைவாகாத GPA யுடன் முதலாம், இரண்டாம் வருடத்திற்கான 60 Credit களை பெறும் போது வியாபார நிர்வாக டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

## 6.4 வியாபார நிர்வாக டிப்ளோமாவில் உயர் அல்லது தகமை சித்தியை பெற்றுக்கொள்ளல்

### 6.4.1 உயர் சித்தி (Distinction)

ஒரு மாணவன்/மாணவி வியாபார நிர்வாகப் பிரிவின் டிப்ளோமா பாடநெறியில் உயர் சித்தியை பெற்றுக் கொள்வதற்கு பதிவு செய்யப்பட்ட முதலாவது கல்வி ஆண்டிலிருந்து இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு அவன்/அவள் தோற்றிய பரீட்சையின் எல்லா பாட

அலகுகளிலும் ஒட்டுமொத்தமாக 3.70 GPA அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றிருத்தல் வேண்டும்.

### 6.4.2 **தகமை சித்தி (Merit)**

ஒரு மாணவன்/மாணவி வியாபார நிர்வாகப் பிரிவின் டிப்ளோமா பாடநெறியில் தகமை சித்தியை பெற்றுக் கொள்வதற்கு பதிவு செய்யப்பட்ட முதலாவது கல்வி ஆண்டிலிருந்து இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு அவன்/அவள் தோற்றிய பரீட்சையின் எல்லா பாட அலகுகளிலும் ஒட்டு மொத்தமாக GPA 3.30 - 3.70 இடையில் பெற்றிருத்தல் வேண்டும்.

### 6.4.3 **பல்கலைக்கழக பட்டம் செல்லுபடியாகும் திகதி**

(Effective date of the Degree)

பல்கலைக்கழக பட்டம் செல்லுபடியாகும் திகதியானது, மாணவர்கள் பட்ட விருதுக்கான (Award of Degree) தேவைகள் அனைத்தையும் திருப்தி செய்த திகதியாகும்.

### 6.4.4 **பல்கலைக்கழக பட்ட விருது (Award of Degree)**

பல்கலைக்கழக பட்ட விருதானது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

# 7. பரீட்சைக்கான சட்டங்களும் தண்டனைகளும்

## 7.1 பரீட்சைக்கான ஒழுக்கக் கோவைக்கான 1996ம் ஆண்டின் இரண்டாம் இலக்க சட்டத்தின் படி பரீட்சைக்கான ஒழுக்கக்கோவை

இக்கோவை 1998 ஆம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்ட இலக்கம் 135 ஆவது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டின் 7ம் இலக்க திருத்தச் சட்டத்தின் படி திருத்தப்பட்டது. 1996.08.24 அன்று பல்கலைக்கழக கவுன்சில் சபையினால் அங்கீகரிக் கப்பட்டது.

**பரீட்சை ஒழுக்கக்கோவைக்கான விதிகள்**

- பரீட்சார்த்தி பரீட்சைக்கு 15 நிமிடங்கள் முன்னரே பரீட்சை மண்டபத்தினுள் நுழைய முடியும். கண்காணிப்பாளரது அனுமதி கிடைக்குமிடத்தே சமுகம் தர முடியும்.
- பரீட்சைமண்டபத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் பரீட்சார்த்தி அமர்ந்து கொள்ளலாம்.
- பரீட்சார்த்தி கொண்டுவந்துள்ள பாடக்குறிப்புக்கள் சமன்பாடுகள் சூத்திரங்கள் அனுமதிக்கபடாத புத்தகங்கள், பொதிகள், பைகள் என்பன மேற்பார்வையாளரினால் குறிப்பிடப்படும் இடங்களில் வைக்கப்பட வேண்டும்.
- பரீட்சை ஆரம்பித்த முதல் 30 நிமிடங்களுக்குப் பின்னர் பரீட்சைக்கு சமுகம் தரும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவிக்கப்படமாட்டார். பரீட்சை முடியும் முன்னர் 30 நிமிடங்ளுக்குப் பின்னர் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேற முடியாது.
- ஒரு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்கு தனது புகைப்படத்தினையும் கையொப்பதினையும் கொண்ட பதிவாளரினாலோ அதிகாரி ஒருவரினாலோ உறுதிபடுத்தப்பட்ட தனது மாணவர் பதிவு புத்தகத்தினை அல்லது பல்கலைக்கழக அடையாள அட்டையினை கொண்டுவர வேண்டும். பரீட்சை அனுமதிப்பத்திரத்திலுள்ள மாணவனது பெயரும் மாணவர் பதிவுப்புத்தகத்திலோ அல்லது பல்கலைக்கழக அடையாள அட்டையிலுள்ள பெயரும் மாறுபடுமிடத்து பதிவாளரினால் உறுதி செய்யப்பட்ட பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு அத்தாட்சிப்பத்திரத்தை கொண்டு வர தவறும் போது தனது தேசிய அடையாள அட்டை அல்லது அண்மையில் எடுத்த புகைப்படம் ஒன்றினை இணைத்து அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- பரீட்சார்த்தி ஒருவர் தனது உடமைகள் அனைத்தையும் கண்காணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க வெளிக்காட்ட வேண்டும்.

- எந்த ஒரு பரீட்சார்த்தியும் இன்னுமொரு பரீட்சார்த்தியிடமிருந்து எப்பொருளையும் இரவல் வாங்கவோ தெடர்புகொள்ள முயற்சிப்பதோ பார்த்து எழுத முற்படவோ முடியாது. எந்த ஒரு பரீட்சார்த்தியும் இன்னுமொரு பரீட்சார்த்திக்கு உதவவோ பார்த்தெழுதவோ சந்தர்ப்பம் வழங்க முடியாது.
- குறிப்பிட்ட தினத்தன்று குறிப்பிட்ட நேரத்தில் வழங்கப்படும் தாள்களையே பரீட்சை எழுதுவதற்கு பயன்படுத்த முடியும்.
- பரீட்சைக்கு தேவையான உபகரணங்கள் (எழுதுவதற்கான தாள்கள், வரைபுத்தாள்கள் சித்திரத் தாள்கள், காசேட்டு தாள்கள்) என்பன தேவையான போது விநியோகிக்கப்படும்.
- மாணவர்களுக்கு வழங்கப்படும் விடைப்புத்தகமோ தாள்களோ மடிக்கப்படவோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ கூடாது. மாணவர்களுக்கு வழங்கப்படும் log புத்தகங்கள் கவனமாக உபயோகிக்கப்படுதுடன் அதனை மேசையில் வைத்துவிட்டே பரீட்சை மண்டபத்தினை விட்டு வெளியேற வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட பயன்படுத்தப்படாத அனைத்து உபகரணங்களும் வைக்கப்படல் வேண்டும்.
- பரீட்சார்த்தி தனது சுட்டிலக்கத்தை தனக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் குறிப்பிட வேண்டும். விடைப்புத்தகத்தில் பரீட்சார்த்தி தனது பெயரையோ வேறு அடையாள குறிகளையோ குறிப்பிட முடியாது.
- பரீட்சார்த்தி தனக்கு வழங்கப்படும் தாள்களிலேயே மேலதிகமான கணக்கீட்டு வேலைகளை செய்ய வேண்டும். அவை பதிவுப் புத்தகத்திலோ, அனுமதிப்பத்திரத்திலோ, பரீட்சை தாள்களிலோ, நேர அட்டவணையிலோ செய்யப்பட முடியாது.
- பரீட்சார்த்தி ஒருவர் மேற்பார்வையாளர்களுக்கோ ஏனைய பரீட்சாத்திகளுக்கோ இடைஞ்சலாக இருக்க முடியாது. பரீட்சை மண்டபத்தினுள் நுழையும் போது வெளியேறும் போது ஒழுக்கத்தினை கடைபிடிக்க வேண்டும். ஒரு பரீட்சாத்தி தனது துர்நடத்தை காரணமாக பரீட்சை மண்டபத்தை விட்டும் வெளியேற்றப்படலாம்.
- எந்த ஒரு பரீட்சாத்தியும் தனதல்லாத வேறு ஒரு பரீட்சாத்தியினதும் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க முடியாது. பரிட்சார்த்திகள் தமது சொந்த பேனைகள், மை, கணித உபகரணங்கள், வரைதல் உபகரணங்கள், அழிறப்பர்கள், பென்சில்கள் மற்றும் கணினிகள் என்பவற்றை கொண்டு வர வேண்டும்.

எந்த ஒரு பரீட்சார்த்தியும் இன்னுமொரு பரீட்சார்த்திக்காக பரீட்சை செய்து கொடுக்க முடியாது.

**பரீட்சை குற்றங்களாக பின்வறுவனவற்றை வகைப்படுத்தலாம்.**

- அனுமதிக்கப்படாத ஆவணங்களை வைத்திருத்தல்.
- துர் நடத்தைகள்.
- பார்த்தெழுதுதல்.
- ஆள்மாறாட்டம்.
- உதவி செய்தல்.

## 7.2 பரீட்சை குற்றங்களுக்கான விசாரணைகளையும் தண்டனைகளையும் தீர்மானித்தல்.

பரீட்சை குற்றங்கள் பரீட்சை மேற்பார்வையாளரினால் பரீட்சைகளின் சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எத்தி வைக்கப்படும். உபவேந்தரினால் நியமிக்கப்பட்ட பரீட்சை குற்றவியல் குழுவினால் விசாரணை செய்யப்படும். இக்குழுவின் அறிக்கை செனட் சபைக்கு அனுப்பப்படும். செனட் சபை குற்றங்களை கருத்திலெடுத்து ஆய்வறிந்த பின்னர் தண்டனைகளை தீர்மானிக்கும்.

## 7.3 பரீட்சை குற்றங்களுக்கான தண்டனைகள்:

| **குற்றங்களின் வகை** | **தண்டனை** |
|---|---|
| • விடைப்பத்திரத்தில் பெயர் எழுதப்பட்டிருத்தல். | • எழுத்து ரீதியான எச்சரிக்கை |
| • மேசையின் மீதோ அருகிலோ பையை வைத்திருத்தல். | • எழுத்து ரீதியான எச்சரிக்கை |
| • அனுமதிக்கப்படாத ஆவணங்களை வைத்திருத்தல்.<br>(a) பரீட்சை மண்டபத்தில் தகவல் கருவிகளை பயன்படுத்தல்<br>(b) குறித்த பாடம் தொர்பான ஆவணங்கள்.<br>(c) பரீட்சை தாள் தொடர்பான குறிப்புக்கள் பைகளிளோ மேசை அருகிலோ காணப்படல்.<br>(d) பரீட்சைக்கு தொடர்பான சூத்திரங்கள் | • அக்குறிப்பிட்ட வினளப் பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் செனட் சபையினால் முன்வைக்கப்படும் வேறு தண்டனைகள்.<br>• ஒரு குறித்த பரீட்சைக்கு தோற்றும் போது கண்டுபிடிக்கப்பட்டால் அனுமதி பத்திரம் நிராகரிக்கப்படும். (அனைத்து பரீடசையும் எழுத முடியாத நிலை தோன்றும்)<br>• இப்பரீட்சார்த்தி (class) வகுப்பு ரீதியான தரமுயர்த்தலுக்கு உட்படமாட்டார்.<br>• நிராகரிக்கப்பட்ட பரீட்சைத் தாள்கள் எதிர்காலத்தில் மீளச்செய்யும் பரீட்சைகளாகவே |

| | |
|---|---|
| போன்றவற்றை கொண்டிருத்தல்.<br><br>(e) மேசையின் மீது அருகிலோ பல்கலைக்கழக விரிவுரைக் குறிப்புக்கள் காணப்படல். (குறித்த பரீட்சையின் பாடங்களுடன் தொடர்பற்றது)<br>(f) தொடர்பற்ற அனுமதிக்கப்படாத சூத்திரங்களை வைத்திருத்தல். | கணிக்கப்படும்.<br>• செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் ஏனைய தண்டனைகள்.<br>(உதாரணம்) ஒரு மாணவன் அனுமதி பத்திரம் Aயின் படி இரண்டாம் வருட முதற்பருவத்தில் சில பாடங்களையும், இன்னும் சில பாடங்களை அனுமதி அட்டை Bயின் படி மீளத்தோற்றுகையில்,<br><br>-இரண்டாம் வருட பாடங்களை செய்து கொண்டிருக்கையில் குற்றம் அவதானிக்கப்படுமாயின் அனுமதி அட்டை Aயிலுள்ள அனைத்த பாடங்களும் நிராகரிக்கப்படும்.<br><br>-முதலாம் வருட பாடங்களை செய்து கொண்டிருக்கையில் குற்றம் கண்டுபிடிக்கப்படுமாயின் அனுமதி அட்டை B செல்லுபடியற்றதாக மாறும்.<br>• முதல் குற்றம் எனின் எழுத்து ரீதியான எச்சரிக்கை.<br>• குறித்த பாடம் செல்லுபடியற்றதாக மாறுவதுடன் செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் வேறு தண்டனைகள். |
| • பரீட்சையின் போது பார்த்தெழுதுதல். | குறிப்பிட்ட ஒரு பரீட்சைக்கு தோற்றும் போது கண்டுபிடிக்கப்பட்டால்,<br><br>• அப்பரீட்சை குறிப்பிடப்பட்டுள்ள அனுமதி அட்டை ரத்தாகிவிடும். (அதிலுள்ள அனைத்து பாடங்களும் மீளத் தோற்றப்பட வேண்டியவை |

| | |
|---|---|
| | என மாறும்.<br>• இப்பரீட்சார்த்தி (class) வகுப்பு ரீதியான தரமுயர்த்தலுக்கு உட்படமாட்டார்.<br>• ஏதிர்காலத்தில் ரத்து செய்யப்பட்ட அனைத்து பாடங்களையும் மீளத் தோற்றல்.<br>• செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் ஏனைய தண்டனைகள். |
| • பரீட்சையின் போது துர் நடத்தை. | • எழுத்து ரீதியான எச்சரிக்கை. |
| • ஆள்மாறாட்டம். | குறிப்பிட்ட ஒரு பரீட்சைக்கு தோற்றும் போது ஒரு மாணவரால் ஆள்மாறாட்டம் கண்டு பிடிக்கப்படுமாயின்,<br>• அனுமதி அட்டை நிராகரிக்கப்படும்.<br>• வகுப்பு ரீதியான தரமுயர்த்தலுக்கு தகுதியற்றவராக கணிக்கப்படுவார்.<br>• நிராகரிக்கப்பட்ட பாடங்கள் அனைத்தும் மீளத் தோற்றப்படல் வேண்டும்.<br>• செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் வேறு தண்டனைகள். |
| • ஓப்படை மற்றும் செயற்றிட்டம் என்பனவற்றை பார்த்தெழுதுதல். | • பூச்சியப் பெறுமானம் வழங்குவதுடன் எழுத்து வடிவிலான எச்சரிக்கை வழங்குதல். |
| • உதவுதல் | ஒரு குறிப்பிட்ட பரீட்சைக்கு தோற்றும் போது கண்டு பிடிக்கப்பட்டால்,<br>• அனுமதி அட்டை ரத்துச் செய்யப்படும்.<br>• வகுப்பு ரீதியான தரமுயர்த்தலுக்கு தகுதியற்றவராக கணிக்கப்படுவார்.<br>• ஏதிர்காலத்தில் ரத்துச் செய்யப்பட்ட பாடங்கள் மீளத் தோற்றப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| | • செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் வேறு தண்டனைகள். |
| • பல்கலைக்கழக உபகரணங்களை நீக்குதல். | • மேற்பார்வையாளர்களினால் எச்சரிக்கப்படுவார். தொடர்ந்தும் அவர் அதில் நிலைத்திருந்தால் செனட் சபை பரிந்துரைக்கும் தண்டனைகள் அவருக்கு வழங்கப்படும். |
| • முறையற்ற உதவிகளை பெற முயற்சித்தல். | • செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் தண்டனைகளுடன் பரீட்சை ரத்தாகிவிடும். |
| • பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரது அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தாமல் விடுதல். | • மேற்பார்வையாளரின் வார்த்தை மூலமான எச்சரிக்கை. பரீட்சார்த்தி தொடர்ந்தும் தவறில் நிலைத்திருந்தால் செனட் சபையினால் பரிந்துரைக்கப்படும் தண்டனை வழங்கப்படும். |

மேலே குறிப்பிடப்பட்ட குற்றங்கள் அல்லாத வேறு குற்றங்களுக்கான தண்டனைகளை பரீட்சை குற்றவியல் குழு தீர்மானிக்கும். 2010 மார்ச் மாதம் 09ம் திகதி முதல் இவை நடைமுறைக்கு வந்தவையாகும்.

**எவ்வாறு நடைமுறைப்படுத்துவது?**

பரீட்சை மேற்பார்வையாளர் செனட் உப சபைக்கு அறிக்கை விடுக்க வேண்டும். செனட் உப சபையானது ஒழுக்காற்று சபைக்கு நடைமுறைப்படுத்தலுக்காக அறிவிக்கும்.

# 8. பொதுவான தகவல்கள் (GENERAL INFORMATION)

## 8.1 மாணவர் பதிவு (Students Registration)

வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்வதற்காக தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கோரப்படும் விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி, குறித்த விண்ணப்பத்தில் கோரப்படும் ஆவணங்களையும் இணைத்து உரிய தினத்திற்கு முன்னர் அல்லது குறிப்பிட்ட தினத்தன்று வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

## 8.2 பதிவு இலக்கம் (Registration Number)

வெளிவாரி மாணவராக பதிவு செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளுக்கும் பதிவு இலக்கம் ஒன்று வழங்கப்படும். இவ்விலக்கத்தினை பல்கலைக்கழகத்துடனான தமது சகல தொடர்புகளிலும் விண்ணப்பதாரிகள் குறிப்பிடுதல் அவசியமாகும்.

## 8.3 பதிவுப் புத்தகமும் பதிவின் செல்லுபடித் தன்மையும் (Registration Book and Validity of Registration)

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் பதிவு புத்தகம் ஒன்றும் அடையாள அட்டை ஒன்றும் வழங்கப்படும்.

வெளிவாரிப் பட்டத்துக்கான பதிவானது பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆறு (06) வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

## 8.4 பதிவினை புதுப்பித்தல்

ஒவ்வொரு கல்வியாண்டின் ஆரம்பத்தின் போதும் பதிவினை புதுப்பித்தல் வேண்டும். தென்கிழக்குப் பல்லைக்கழகத்தின இணையத்தளத்திலிருந்தோ அல்லது வெளிவாரிப் பட்டப்ப படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையதிலிருந்தோ (CEDPL) புதுப்பித்தலுக்கான படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். புதுப்பித்தலுக்கான கட்டணங்களை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டினை CEDPL ற்கு ஒப்படைக்க வேண்டும்.

## 8.5 பதிவினை இரத்து செய்தல்

மாணவர்கள் தாம் விரும்பிய நேரத்தில் தமது பதிவினை இரத்து செய்ய முடியும். எவ்வாறாயினும் செலுத்தப்பட்ட பதிவுக்கட்டணம் மீளப் பெற முடியாது.

## 8.6 கட்டணங்கள்

| விபரம் | தொகை (ரூபா.) |
|---|---|
| விண்ணப்ப செயற்படுத்தல் | 1,500.00 |
| முதல் வருடம் | 40,000.00 |
| இரண்டாம் வருடம் | 40,000.00 |
| மூன்றாம் வருடம் | 40,000.00 |

- ஒரு வருடத்துக்கான கட்டணம் இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்.

- கட்டணங்கள் பதிவுக் கட்டணம், பரீட்சை கட்டணம், கையேட்டுக்கான கட்டணம், கருத்தரங்கு கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.
- செலுத்தப்பட்ட கட்டணங்கள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.

## 8.7 பல்கலைக்கழக நூலக சேவை

பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகமானது மாணவர்களையும் பல்கலைக்கழக பீடங்களினது உறுப்பினர்களையும் மிகச்சிறந்த கல்வித்தரத்தை அடைவதில் மையப் புள்ளியாக தொழிற்படுகிறது. மாணவர்கள் நூலக சேவைகளை பயன்படுத்தி அதன் உச்ச பயனை பெற முடியும்.

## 8.8 தொடர்பு கொள்ளல் முறைமை

கல்வியியல் நிகழ்ச்சிகள் தொடர்பாக தொடர்பு கொள்ள கீழ்வரும் முகவரிக்கு கடிதங்களை அனுப்பலாம்.

Director
Center for External Degree and Professional Learning
South Eastern University of Srilanka
University Park, Oluvil.

மேலும் மாணவர்கள் உடனுக்குடன் புதிய தகவல்களை அல்லது மாற்றத்தினை பெற்றுக்கொள்வதற்கு CEDPL இன் இணையத்தளத்தினை மற்றும் LMS களை தொடர்ச்சியாக அவதானிக்குமாறு வேண்டப்படுகிறீர்.

இக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள எந்தவொரு விடையங்களையும் தேவை என்று உணரப்படும் பட்சத்தில் எந்த நேரத்திலும் மாற்றங்களை எற்படுத்துவதற்கான உரிமை பல்கலைக் கழகத்திற்க்கு உண்டு. எனவே மாணவர்கள் உடனுக்குடன் புதிய தகவல்களை அல்லது மாற்றத்தினை பெற்றுக்கொள்வதற்கு CEDPL இன் இணையத்தளத்தினை மற்றும் LMS களை தொடர்ச்சியாக அவதானிக்குமாறு வேண்டப்படுகிறீர் கள்.

**www.seu.ac.lk**

*********************+++++++++++******************

Center for External Degree and Professional Learning
South Eastern University of Srilanka
University Park, Oluvil
www.seu.ac.lk